**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 19** **நாள் : 25.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 15வது தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, 2011-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும், ஜனவரி 25ம் தேதி தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15வது தேசிய வாக்காளர் தினம் "**வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்**" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.01.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழியினை மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தேர்தல் பணியில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டி கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், தேர்தல் குறித்த விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி/கல்லூரி மாணவ, மாணவியரைப் பாராட்டி சான்றிதழ்களையும், சென்னை மாவட்டத்தில் 18 வயது நிரம்பிய 10 முதல் முறை வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டையினையும் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது** :

தேர்தலில் வாக்களிப்பது நமது ஜனநாயகக் கடமையாகும். வாக்கு செலுத்துவது நமது உரிமையாகும். 18 வயது நிரம்பியவர்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது அவசியமாகும். 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்களிப்பதை தங்களது ஜனநாயகக் கடமையாக

கருதி வாக்களித்திட வேண்டும். வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கல், முகவரி மாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். அனைத்து வாக்காளர்களிடையேயும் தேர்தலில் வாக்கு செலுத்துவதன் அவசியம் குறித்தும், நேர்மையாக வாக்களித்தல் குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதோடு மட்டுமல்லாமல் வாக்காளர் அடையாள அட்டையினைப் பெற்று, தேர்தல் நாளன்று வாக்களிக்க பயன்படுத்திட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி)), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.பி.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**